தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

(முற்பகல் 11–50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1981-82 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே 1981–82 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மேல் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது. அந்த மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் விவர அறிக்கையை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1981–82 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்தபோது, சில மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் மிகைச் செலவு செய்யப் பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செல விற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1981–82 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி

ஒதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளை முறைப்படுத்த சட்டமன்றப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப் படலாமென்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்து உள்ளது. அவ்வாறே, 1981–82 ஆம் ஆண்டிற்கான, மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகளின் விவர அறிக்கை தற்போது தாக்கல் செய்யப்படுகிறது. மிகைச் செலவு மொத் தம் ரூ. 9.17 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில், பாசனம், ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், பொதுப் பணிகள் (கட்டிடங்கள்) ஆகியவற்றின்கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. மாநிலக் கணக்குத்துறைத் தலைவர், நிதி ஆண்டின் இறுதியில், வட்டிச் செலவுகள், பணியாளரமைப்புச் செலவுகள், எந்திரம்-சாதனங்கள் குறித்த செலவுகள், ஓய்வூதியச் செலவுகள் ஆகியவற்றில் வீதாச்சார அடிப்படையில், இல சரிக் கட்டல்கள் செய்ததால் 'பாசனம்' என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற் பட்டது. ஓய்வூதியத் திட்டங்கள் தாராளமாக்கப்பட்டதாலும், இன்னும் அதிகமான பெருக்கு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம் நீட்டிக்கப்பட்டதாலும், இக் காரணங்களினால் எதிர்பார்த்ததை விட அதிகமான பெருக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்ட தாலும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இவ்வாண்டில், பல அகவிலைப்படித்தவணைத் தொகைகள் வழங்கப்பட்டதாலும், 'ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்' என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டு உள்ளது.

4. புயல், வெள்ளம் முதலியவை காரணமாகச் சிறப்புச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் பொதுப் பணி கள் (கட்டிடங்கள்) என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. இம் மானியத்தின் கீழ் வரும் கணக்குகள் தவறாக வகைப்படுத்தப் பட்டதாலும் ஓரளவுக்கு மிகைச் செலவு ஏற்பட்டது.

5. 1981–82 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகள் பற்றிய விவர அறிக்கைக்கு ஒப்பு தலளிக்குமாறு பேரவையை வேண்டி அமர்கிறேன்.

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1982-83 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மேல் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது. அந்த மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத் தில் வைக்க முன் வந்துள்ளேன்.